# 6. முயல் அரசன்

## வினாக்களுக்கு விடையளி

Question 1.
முயலின் கவலைக்குக் காரணம் என்ன?
Answer:
தன் மூதாதையரைத் தன் பசிக்கு இரையாக்கிய புலி என்றாவது ஒரு நாள் தன்னையும் தின்று விடுமோ என்பதுதான் முயலின் கவலைக்குக் காரணம் ஆகும்.

Question 2.
விலங்குகளின் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது?
Answer:
முயல் புலியிடம், "நீ இந்தக் காட்டின் அரசனாக இனிமேலும் நீடிக்கக் கூடாது என்று எல்லா விலங்குகளும் ஒரே

மனதாகத் தீர்மானம் நிறைவேற்றின”
என்று கூறியது.

Question 3.
முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க
புலியை என்ன செய்யக் கூறியது?
Answer:
முயல், தான் அரசன் என்பதை
நிரூபிக்க புலியிடம், தன்னை முதுகில்
ஏற்றிக் கொண்டு போகச் சொன்னது.

4. புலியை மன்னித்து விட்டுவிட முயல்
கூறிய கட்டுப்பாடு என்ன?
புலியை மன்னித்து விட்டுவிட முயல்,
“உன்னை மன்னித்து விடுகிறேன். நீ இந்தக்
காட்டிலேயே இருக்கக்கூடாது. எங்காவது
ஓடிப்போய்விடு” என்ற கட்டுபாட்டினை
விதித்தது.

5. விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின?

Answer:

விலங்குகள் உண்மையில் புலியைக் கண்டு அஞ்சின.